

# பனிமயம்

மார்ச் 2021

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-



## பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...

உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

அருளின் காலமாம் தவக்காலத்தில் இருக்கிறோம். செபம், தவம், அன்புச் செயல்களால் நற்செய்தி காட்டும் வாழ்வு வாழ முயற்சிகள் எடுக்கிறோம். அவற்றுக்கு உதவியாகப் பேராலயத்தில் பல சிறப்பு நிகழ்வுகள் இத்தவக்காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று **14.03.2021** ஞாயிறு காலை **09.30** முதல் மாலை **04.00** வரை மங்கலகிரி, டிவைன் மெர்சி தியான இல்லத்தில் நடைபெறவுள்ள தவக்காலத் தியானம். அருள்பணி. இராயப்பன் வழிநடத்தவிருக்கிற இத்தியானத்தில் இறைபுகழ்ச்சி, இறைச் செய்தி, திருப்பலி, குணமளிக்கும் நற்கருணை ஆசீர் ஆகியன இடம்பெறும். கடந்த ஆண்டு போலவே, இரண்டு பேருந்துகள் ஏற்பாடு செய்யப்படும். உங்கள் பெயர்களைப் பதிவுசெய்து, குடும்பமாகக் கலந்துகொள்ளுங்கள்.

அது போன்ற இதர நிகழ்வுகளின் தகவல்கள் இந்த இதழிலேயே அச்சிடப்பட்டிருக்கின்றன. எவற்றிலெல்லாம் பங்கேற்க முடியுமோ, அவற்றில் ஆர்வமுடன் பங்கேற்க அழைக்கிறேன். பிறரையும் பங்கேற்க ஊக்கப்படுத்துங்கள்.

மேலும், தனியாக, குடும்பமாக, அன்பியமாக, பக்த சபையாக அறச் செயல்களும், அன்புப் பணிகளும் செய்யவும் இத்தவக்காலத்தில் அழைப்பு விடுக்கிறேன். வழிபாட்டில் பங்கேற்கும் ஆர்வத்தோடு, பிறரன்புப் பணிகளிலும் ஈடுபடுவோம். “அன்பு செலுத்தவும் நற்செயல்கள் புரியவும் ஒருவரையொருவர் தூண்டியெழுப்பக் கருத்தாயிருப்போமாக” (எபி 10:24) என்னும் இறைவார்த்தைக்கேற்ப இத்தவக்காலம் அமைவதாக.

தவக்காலத்தின் அனைத்து செயல்பாடுகளும் நம்மை உயிர்ப்பின் மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்னும் எதிர்நோக்குடன் நம் தவப்பயணத்தைத் தொடர்வோம்.

சாவையும், தீமைகளையும் வென்ற வெற்றி வீரராம் கிறிஸ்துவை ஈன்ற பனிமயத் தாயின் ஆசி உங்களோடு இருப்பதாக!



என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்




உதயம் 21 தாரகை 7

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருட்பணி. குமார்ராஜா**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா


**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |


வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com


## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**நல்லிணக்கத்தின் புனிதத்தன்மை**

கடவுளின் எல்லையற்ற கருணையை ருசிக்க, புதுப்பிக்கப்பட்ட ஆழத்துடன் நல்லிணக்கத்தின் சடங்கை அனுபவிக்க வேண்டுமென்று மன்றாடுவோம்.

# உள்ளே...


1. பேராலய வரலாறு ....................4
   செல்வராஜ் மிராந்தா
2. பனிமயம் - மீள்பார்வை....................6
   கலாபன் வாஸ்
3. எலிசபெத்துக்கு உதவ அன்பின் விரைவுப் பயணம்!....................8
   அருள் மரி வேந்தன்
4. இறைவாக்கினர்களின் அரசி....................10
   அருள்பணி. ஸ்டார்லின் ச.ல.
5. மரியன்னை புனிதர்கள் : புனித வின்சென்ட் தே பவுல் ....................12
   அருள்பணி. குமார்ராஜா
6. விவிலியப் போட்டி ....................14
7. மாதம் ஒரு மாதா படம்....................17
8. பனிமயப் பகிர்வு....................18

தூய பனிமய அன்னை திருத்தல பேராலய வரலாற்றுக் குறிப்புகள் : 12



# பேராலய வரலாறு

முத்துக்குளித்துறையின் பத்தொன்பதாவது (கத்தோலிக்க) ஜாதித் தலைவன் சிஞ்ஞோர் தொன் கபிரியேல் தெ குருஸ் வாஸ் பல்தானோ (1856 முதல் 1889 வரை) அவர்கட்கு ஆண் வாரிசு இல்லாத நிலையில் தன் ஒரே மகளை வேம்பாரைப் பூர்வீகமாகக் கொண்டு தூத்துக்குடியில் பிறந்த செல்வந்தர் ரொசாரியோ மோத்தா என்பவருக்கு மணம் முடித்துக் கொடுத்திருந்தார். அப்போதே சில எதிர்ப்புகள் கிளம்பத் தொடங்கி அமர்ந்ததாம். காரணம் மோத்தா என்ற குடும்பப் பெயர் போர்த்துக்கீசிய மொழியில் Mota என்றும் டச்சு மொழியில் அது Mottan என்றும் எழுதப் பட்டதாம். ரொசாரியோ மோத்தாவின் குடும்பப் பெயர் ரோமன் லிபியில் Motta என்று ('n' என்ற எழுத்து நீங்கலாக 't' என்ற எழுத்து இரட்டிப்பாகவும் எழுதப் பட்டிருந்ததாம். (லசால் பள்ளிக்கூட வளாகத்தில் கிடக்கும் அவர் கல்லறைக் கல்லில் motta என்றுதான் காணக்கிடக்கிறது. அத்தம் பதியருக்கு 1864ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் தேதி லாசர் மோத்தா வாஸ் என்ற ஆண்மகவு பிறந்தது.

ஜாதித் தலைவன் தொன் கபிரியேல் தெ குருஸ் வாஸ் பல்தானோ ஆண் வாரிசில்லாத காரணத்தால் தன் பெயரன் லாசர் மோத்தா வாஸ் அவர்களைத் தனது வாரிசு சாதித் தலைவனாக பதவியேற்க அனுமதி கோரி அன்றைய பிரிட்டிஷ் அரசுக்கு சமர்ப்பித்த விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து 1889ஆம் ஆண்டு தொம் லாசர் மோத்தாவை 20வது சாதித் தலைவனாகப் பிரகடனப்படுத்தியபோது மக்களிடையே பெரும் எதிர்ப்பு கிளம்பியது. கனன்று கொண்டிருந்த கங்கு சிலரின் காற்று வீச்சால் பற்றி எரியத் தொடங்கிற்று. சாதித் தலைவனாக பதவி வைக்க மணமுடித்தவனாக இருக்க வேண்டும். எனவே, திருமணத்திற்குப் பிறகு 1891ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5ஆம் நாள் வெகு ஆடம்பரமாக லாசர் மோத்தாவின் பதவியேற்பு விழா நடத்தப்பட்டது.

புதிய ஜாதித் தலைவனை ஆதரித்தவர் எதிர்த்தவர் என சமுதாயம் இரண்டாக பிளவுபட்டு மோதிக் கொண்டனர். எதிர்ப்பாளர்கள் தங்களை பிரபுக்கள் (Chambulain) என்று போர்த்துக்கீசிய மொழியில் பொருள்கொண்ட Comereiro என்று தங்களை அழைத்துக் கொண்டனர். லத்தீன் மொழியில் Comereiro என்றால் (Table attendant) மேசையில் பரிமாறுபவன் என்று பொருளாம். சாதித் தலைவன் ஆதரவாளர்கள் மேசைக்காரர் என்று அழைக்கப்பட்டனர். என்ற போர்த்துக்கீசிய சொல் மருவி 'கம்மாரக்காரர்' என்று ஆகிவிட்டது எனச் சொல்வர்.

தூய பனிமய அன்னையின் ஆலயம் கோவா மிஷன் குருக்களின் ஆதிக்கத்திலும் சாதித்தலைவனின் செல்வாக்கிலும் இருந்ததால், கம்மாரகாரர் பிரஞ்சு மிஷன் (இயேசு சபை) குருக்களையும் அவர்கள் கோயிலையும் பின்பற்றினர். மையவாடிகள்கூட இருவேறாக குடியிருப்பு பகுதிக்கு வெளியே (இன்று லசால் பள்ளி இருக்கும் இடத்தில்) பெரிய கோயில் மையவாடி என்றும் சின்னக் கோயில் மையவாடி என்றும் தனித்தனியே இருந்தன. அவ்வேறுபாடு பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலேயே தொடங்கிவிட்டது. திருமண

விருந்துகளில்கூட ஒரு பிரிவினர் மற்ற பிரிவினர் வீடுகளில் பங்கேற்பதில்லை.

சாதித்தலைவன் தொன் லாசர் மோத்தா வாஸ் 1914-ஆம் ஆண்டு சூலை மாதம் 5ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்கள். அதன்பின் 12 (பன்னிரண்டு) ஆண்டு காலம் சாதித்தலைவன் இல்லாமலே சமுதாயம் நடைபோட்டது என்றாலும் அதன் காரணமாக இரு பிளவுகளுக்கும் இடையில் முட்டலும் மோதலும் தொடர்ந்துகொண்டுதான் இருந்தது.

1923-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23ஆம் நாள் மொன்சிஞ்ஞோர் பிரான்சிஸ் திபூர்சியுஸ் ரோச் சே.ச. தூத்துக்குடியில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு அன்று முதல் தூத்துக்குடி தலைமையிடமாகக் கொண்டு புதிதாக (லத்தீன் ரீதியில்) ஒரு புதிய மறைமாவட்டம் உருவாக்கப்பட்டது. கோவா மிஷன் ஆலயமான பரிசுத்த பனிமய மாதா ஆலயக் குருக்களும் மக்களும் புதிய தூத்துக்குடி மறைமாவட்டத்தில் இணைய மறுத்ததைத் தொடர்ந்து மயிலை பதுர்வாத மறைமாவட்டத்தில் இணைந்திருந்தது. அது புரபகாந்தா பதுர்வாதா பிரிவினர்க்கும், கம்மாரகாரர் மேசைக்காரர் மோதலுக்கம் வலுவூட்டியது. அவற்றுக்கிடையே முத்துக் கலாபத்தில் சாதித் தலைமைக்கும் சமுதாயத்திற்கும் தொல்பழங்காலம் முதல் இருந்த உரிமைகளையும் பங்குகளையும் காரணம் காட்டி ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அனுமதியோடு இறந்துபட்ட சாதித்தலைவன் தொன் லாசர் மோத்தா வாஸ் அவர்களின் மூத்தமகன் அனத்தாசியுஸ் மோத்தாவை இலங்கையிலிருந்து தூத்துக்குடிக்கு அழைத்து வந்து புதிய சாதித் தலைவனாக மேசைக்காரர் தெரிந்தெடுத்தனர். இதற்கு மிக பலம் வாய்ந்த எதிர்ப்புகள் கிளம்பின. கொழும்பு, தூத்துக்குடி, உவரி, நாகப்பட்டினம், பழையகாயல், பெரியதாழை, பேட்டை, இடிந்தகரை, கூட்டப்புளி, கருங்குளம், புன்னைக்காயல் என பல ஊர்களிலிருந்தும் எதிர்ப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. புன்னைக்காயலில் இருந்து 38 பேர் கையொப்பமிட்டு அனுப்பிய



கடிதத்தில், "மேசைக்காரர் ஒருவரை பரதவ சாதித் தலைவராக ஏற்க முடியாது. ஏனெனில் எமது சாதியைச் சாராத ஒருவர் (மேசைக்காரர்) எமது சாதித் தலைவராக வருவதை எங்களால் ஏற்றுக்கொள்ள இயலாது" என்று மிகக் கடுமையாக எழுதினர்.

1926ஆம் ஆண்டு தூய பனிமய அன்னை ஆலயத்தில் திருப்பலியின்போது தொம் அனத்தாசியுஸ் மோத்தா சாதித் தலைவனாக பதவிப் பிரமாணம் எடுக்கும் நிகழ்வு நடந்து கொண்டிருந்தபோது, அதை எதிர்த்து கம்மாரகாரர் ஒரு நாடக நடிகனுக்கு சாதித் தலைவனுக்கான உடைகளையும் கொக்கரை மகுடத்தையும் அணிவித்து குதிரை மேல் அமர வைத்து கோயில் வளாகத்துக்குள் கொண்டு வந்தார்கள். அது அடிதடிகளை ஏற்படுத்தவே விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்திவிட்டது.



**செல்வராஜ் மிராந்தா**

# 'பனிமயம்' – மீள் பார்வை 18

## 2002 - 2003

**இதோ.... ஒரு மனிதன்!**

எளிய தோற்றம். உழைத்து ஓய்ந்த முகம். கைத்தறி உடை. பிய்ந்த ரப்பர் செருப்பு. வயது 62. பெயர் **கல்யாண சுந்தரம்**. பக்கத்து வீடுகளில் வசிப்பவர்களின் துணிகளை 'அயர்ன்' செய்து கொடுத்தால், நாளொன்றுக்கு இருபது ரூபாய் கிடைக்கும். ஆனால், அவரது மீதமுள்ள பணத்தை (லட்சக்கணக்கில் உள்ளது) தேவையானவர்களுக்குக் கொடுத்து வாழ வைக்கிறார்!

முப்பது வருடமாகக் கல்லூரிகளில் நூலகக் காப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றபோது அவரின் சேமிப்பு 35 லட்சம் ரூபாய். அவ்வளவு தொகையும், திருநெல்வேலியில் உள்ள கௌசானல் மற்றும் அறக் கட்டளைக்கும் சேர்த்து, அறப்பணிகளுக்கு அள்ளிக் கொடுத்துவிட்டார்! - சிப்பி இரசிகவேள்.

★ **மெசியா** பிறந்ததும், மூன்று அரசர்கள்/ ஞானிகள் அவரைத் தரிசிக்க வந்தனர். அவர்களின் பெயர் பல்வேறுவித மாற்றங்களுடன் புதிய பரிணாமம் பெற்றுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஹோர்மிடா, யாஸ்டெதர்ட், பெரோசாத் என்றும், பிறகு லார்வான் டாட், ஹெர்மிடாஸ், குஷ்னாகாப் என்றும், பிறகு, பிதசாரியா, மெல்கோன், காஸ்பா என்றும், இறுதியாக கஸ்பார், மெல்கியோர், பல்தசார் என்றும் அழைக்கப்படுகின்றனர். கஸ்பார் என்றால் 'வெள்ளையர்' / மெல்கியோர் என்றால் 'ஒளியின் அரசர்' / பல்தசார் என்றால் 'கருவூலங்களின் மன்னன்' என்று பொருள் - தேன்மலர்.

தம்மை நாடி வந்தவர்க்கன்றி, தம்மைப் பகைத்து நிந்தித்துக் கொடூர வேதனைக்குள்ளாக்கி, தம் விலாவில் ஈட்டியால் குத்திய வேளையிலும், ஒற்றைக்கண் **மால்க்கூஸ்** என்பவளின் பார்வையற்ற கண்ணில் தம் இரத்தத்தைத் தெரிக்கச் செய்து பார்வை பெறச் செய்தார் எனில், அவரை விசுவசித்து மன்றாடும் நமக்கு இயேசு உதவாமலிருப்பாரோ?

எல்லாவற்றிற்கும் மேலாக, "இறைவா! என்னை முழுமையும் உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். இனி நான் உமக்கே சொந்தம். எனது எண்ணம், சொல், செயல் யாவும் உமக்கு ஏற்றதாக இருக்கச் செய்தருளும். எனது வாழ்க்கையில் நிகழும் யாவும் உம்மிடமிருந்தே வருவதால், எல்லாம் நன்மைக்கே என ஏற்றுக் கொள்கிறேன்" என்று மன்றாடுவதே சிறந்த வல்லமையுள்ள செபமாகும். – **இடிந்தகரை T.A. சந்தக்குருஸ்**

## 2003

நமது அன்னையைப் போல நாமும் நமது வாழ்வில் இறைவனின் குரலை இனம் கண்டுகொள்ள அழைக்கப்படுகின்றோம். நமது வாழ்க்கையில், நமது சமூகத்தில் வாழும் பல நிலைகளில் உள்ள மனிதர்கள் வாயிலாக, எழும் குரல்களில் இறைவனை அடையாளம் கண்டு கொள்கின்றோமா. இந்தச் சமூகத்தில் பல அடிமைத்தளங்கள், தீமைகள், ஏற்றத் தாழ்வுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்தச் சமூக வீக்கங்களில் இருந்து, பிளவுகளிலிருந்து, வேறுபாடுகளில் இருந்து விடுபட்டு, சமத்துவச் சமுதாயம் அமைக்க, நாம் தயாராயிருக்கிறோமா? இதுபோன்ற ஏற்றத்தாழ்வுள்ள சமுதாயத்தில் இருந்து எழுகின்ற குரல்களில் இறைவனை அடையாளம் கண்டு, இறைவாக்கினரைப் போல, அன்னை மரியாளைப் போல, இறையாட்சியை இம்மண்ணில் மலரச் செய்ய நாம் ஆயத்தமாயிருக்கின்றோமா? அவ்வாறு இறையாட்சியை மலரச் செய்யும்போது, நாமும் இறைவனின் உண்மைச் சீடர்களாக இவ்வுலகில் வலம் வருவோம். – **அருட்தந்தை அருள்குமார்.**

★ **சங்கைக்குரிய சிலுவைமுத்து தல்மேய்தா** (Fr. S.M.D.) சுவாமிகள் உதவித்தொகையாக மேற்றிராசனக் கோயிலில் இருந்த வேளையில், 1935-ம் வருடம், **ரோச் ஆண்டவர்** குருத்துவ ஜுபிலியைக் கொண்டாடினார்கள். பதுரவாது புரோபகாந்தா மிஷன் போட்டிகள் (DUAL JURISDICTION) இரட்டை ஆட்சி; 4.4.1930ல் முழுவதும் எடுபட்டுவிட்டபடியால், தேவ நற்கருணைச் சுற்றுப் பிரகாரம் முதல் முறையாக, பரிசுத்த பனிமயத்தாய் ஆலயத்திலிருந்து துவக்கி FIRE SERVICE STATION முன் அமைத்திருந்த பந்தலில் ஆசீர் முடித்து, மேற்றிராசன ஆலயத்திலும் தேவ நற்கருணை ஆசீர் அருளப்பட்டது. - சங். தல்மெய்தா சுவாமிகளின் 30-ம் நாள் நினைவு மலர், 1980.

★ **'ஆகட்டும்'** என்று கூறி உலக வரலாற்றையே மாற்றியமைத்த மரியன்னை நமக்குக் கூறுவது - தொடக்கத்தில் இறைவன் 'ஆகட்டும்' என்றார்; விண்ணும் மண்ணும் படைக்கப்பட்டன. நீயும் 'ஆகட்டும்' என்று துணிந்து சொல்; உன்னால் புதிய வானத்தையும் புதிய வையகத்தையும் படைக்க முடியும். 'ஆகட்டும்' என்று நான் கூறியதால் மீட்பரின் தாயானேன். 'ஆகட்டும்' என்று துணிந்து சொல், நீயும் மீட்பரின் தாயாகலாம். அதாவது, இயேசு கிறிஸ்து உன் வாழ்வில் மறுஉரு எடுப்பார்.

'ஆகட்டும்' என்று என் மகன் கெத்சமனித் தோட்டத்தில் கூறி உலகை மீட்டார். நீயும் துணிந்து 'ஆகட்டும்' என்று சொல். உன்னால் உலகை எல்லாவித அடிமைத் தளைகளில் இருந்தும் மீட்க முடியும். 'ஆகட்டும்' என்று துணிந்து கூறுவோமா? - **புஷ்பம் பனிமயம்.**

★ **'ஆரோகண மாதா அருள்மாலை'** - நாங்கள் கண்ணீர்க் கணவாயில், செல்லும் வழியறியாது, செயல் இழந்து, கவலையால் அலைக்கழிக்கப்பட்டு, தண்ணீர் கண்டறியாத ஒரு செடியின் தளிர் இலைபோல் வாடி வதங்கி இருக்கிறோம். இவ்வுலகம் பாவத்தால் நலிவுற்றுப் பரிதவிக்கும் நிலையை அறிந்து, அதனை மீட்கத் தனது ஒரே மகனைத் தந்த மரியே, எங்கள் துன்ப நிலையினையும் எண்ணிப் பார்த்து இரங்கி, நாங்கள் படுகின்ற துன்பத்தை நீக்குவீராக -

கண்ணீர்க் கணவாயில்
கவலைகள் மிகவதைக்க
தண்ணீர் காணாத
தளிரென நைவுற்றோம்
மண்ணீர் மையறிந்து
மைந்தனைத் தரும் மாறியே
உண்ணீர் எம்நிலையை
உறுதுயர் களைவீரே!

**- பொ.ம. ராசமணி**



★ பெறுவதிலும், தருவதே இன்பம் என்று வாழ்ந்து, மக்கள் மத்தியில் இடம் பிடித்தவர் தூத்துக்குடி ஜே.எல்.பி. ரோச் விக்டோரியா. 1926 முதல் 1946 வரை தூத்துக்குடி நகர சபைத் தலைவராகப் பணியாற்றியவர். 1937-ல் சென்னை சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1948-ல் மேல்சபை உறுப்பினராகி, மீன்வளத்துறை அமைச்சரானார். அன்றைய மக்கள், கல்வியறிவின்றி அவதியுறும் நிலை கண்டு, மிகவும் வருந்தினார். முதியோர் கல்வி மூலம் மக்களிடம் இருந்த பல தீய பழக்க வழக்கங்களை விட்டொழிக்கவும், அவர்களின் அருள் வாழ்வுக்கும் பெரிதும் உதவினார். 1918-ல் **'நம்பிக்கைக் குழு'** துவங்கி, குடிப் பழக்கத்தை நீக்க முயற்சித்து வெற்றியும் கண்டார். இவரின் உன்னதமான சமூக, ஆன்மீகப் பணிகளைப் பாராட்டி **திருத்தந்தை 12-ம் பத்திநாதர்** 1952-ம் ஆண்டு, **'செவாலியர்'** விருது வழங்கினார். - **ஞா. பீட்டர்,** தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு 'புது யுகத்தில் பொதுநிலையினர்' நூலிலிருந்து.



**கலாபன் வாஸ்**
94863 90793





மரியன்னையின் மேன்மைகள் : 13

மரியாவின் பயணங்கள்: 1

# எலிசபெத்துக்கு உதவ அன்பின் விரைவுப் பயணம்!

அன்னை மரியா தம் வாழ்வில் பல பயணங்களை மேற்கொண்டார். அந்தப் பயணங்களிலிருந்து நாமும் சில பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். நற்செய்தி நூல்களில் நாம் காணும் மரியாவின் முதல் பயணம் தம் உறவினரான எலிசபெத்தைச் சந்திக்க சென்ற பயணம்தான். 'கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட எலிசபெத் கருவுற்றிருக்கிறார், அவருக்கு இது ஆறாம் மாதம்' என்று கபிரியேல் தூதரால் அறிவிக்கப்பட்டபோது, "மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார்" (லூக் 1:39) என்று இந்தப் பயணத்தை விவரிக்கிறது லூக்கா நற்செய்தி.

இந்த ஊர் எருசலேமுக்குத் தெற்கேயுள்ள **எபிரோன்** என்று நம்புகிறார்கள் அறிஞர்கள். இது நாசரேத்திலிருந்து 130 கி.மீ. தொலைவு உள்ளது. இந்தப் பயணத்தை மரியா தனியாக மேற்கொண்டிருக்க முடியாது. அவருக்குத் திருமண ஒப்பந்தமாயிருந்த யோசேப்பு அவரை அழைத்துச் சென்று அங்கே விட்டுவிட்டு மீண்டும் எருசலேமுக்குத் திரும்பியிருப்பார் என்றும், மூன்று மாதங்கள் கழித்து அவரை அழைத்துவர மீண்டும் சென்றிருப்பார் என்றும் கருதப்படுகிறது. இந்தப் பயணத்திலிருந்து நாம் மூன்று பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

**1. தன்னலம் கருதா அன்பின் பயணம்.** கருவுற்றிருக்கும் தன் உறவினருக்கு உதவ வேண்டும் என்னும் பரிவுள்ளத்தோடு மரியா பயணம் செய்கிறார். இந்த வேளையில் மரியாவும் கருவுற்றிருந்தார் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். கன்னியாய் இருந்த மரியா முதன்முறையாகக் கருவுற்றிருக்கும் வேளையில் அது தொடர்பான உடல் மற்றும் மனம் சார்ந்த சோர்வுகள் அவருக்கும் இருந்திருக்கும் என்பது தெளிவு. தனக்கே பிறரின் உதவி தேவைப்படும் வேளையில் கருவுற்றிருக்கும் தம் உறவினருக்கு உதவ வேண்டும் என்னும் எண்ணத்தில் மரியா மேற்கொள்ளும் இப்பயணம் அவரது தன்னலம் தவிர்த்த அன்பை எண்பிக்கும் பயணமாக அமைகிறது.

கடவுளிடம் அன்பு செலுத்துவோர் **தம் சகோதரர் சகோதரிகளிடமும் அன்பு** செலுத்த வேண்டும். இதுவே அவரிடமிருந்து நாம் பெற்ற கட்டளையாகும் (1 யோவா 4:21) என்கிறார் யோவான். இறைவன்பால் அளவுகடந்த அன்புகொண்டிருந்த மரியா, அந்த அன்பைத் தம் உறவினரான எலிசபெத்திடம் செலுத்தி எண்பிக்கிறார்.

**2. தேவையில் இருப்போருக்கு உதவும் பயணம்.** தம் உறவினரான எலிசபெத் ஆறு மாதத் தாய்மைப்பருவத்தில் இருப்பதால், மரியாவின் பயணம் கூடுதல் சிறப்புப் பெறுகிறது. தேவையில் இருப்போருக்கு உதவுவதே மாந்த நேயம். அதனை மரியாவின் பயணம் நன்கு எடுத்துக்காட்டுகிறது. "உலகச் செல்வத்தைப் பெற்றிருப்போர் தம் சகோதரர் சகோதரிகள் **தேவையில் உழல்வதைக் கண்டும் பரிவு** காட்டவில்லையென்றால் அவர்களிடம் கடவுளின் அன்பு எப்படி நிலைத்திருக்கும்?" (1 யோவா 3:17) என்று கேள்வி எழுப்புகிறார் யோவான். எனவே, தேவையில் இருக்கும் எலிசபெத்தைத் தேடிச் சென்று உதவும் இப்பயணம் நமக்கொரு பாடமாக அமைகிறது.

இறுதித் தீர்ப்பு பற்றிய இயேசுவின் உவமையில் நன்மை செய்தோரைப் பாராட்டும் நடுவர் "நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்; நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக் கொண்டீர்கள்;

சிறையில் இருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள்‘ என்பார்” (மத் 25:36). தேடிவந்து உதவுவதே அன்பின் சிறந்த வெளிப்பாடு என்பதை அன்னை மரியாவின் இந்தப் பயணத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம்.

**3. விரைவுப் பயணம்.** அன்னை மரியா எலிசபெத்தின் ஊருக்கு விரைந்து சென்றார்ணி (லூக் 1:39) என்னும் செய்தியும் நமக்கு மிகப்பெரிய பாடமாக அமைகிறது. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்புணி என்னும் குறள் விரைந்து உதவுவதே நட்பின் பண்பு என்கிறது. விரைந்து செயல்படுவதை நல்ல மதிப்பீடாக விவிலியமும் காட்டுகிறது.

பழைய ஏற்பாட்டில் தம் வீட்டிற்கு வந்த விருந்தினர்களை **ஆபிரகாம்** எவ்வளவு விரைவுத் தன்மையுடன் உபசரித்தார் என்பதைத் தொடக்க நூலின் 18ஆம் அதிகாரம் நன்கு பதிவு செய்துள்ளது. முதலில் தம் விருந்தினர்களிடம் “இதோ **விரைவில்** கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரட்டும். உங்கள் கால்களைக் கழுவியபின், இம் மரத்தடியில் இளைப்பாறுங்கள்” (தொநூ 18:4) என்கிறார். பின்னர், “ஆபிரகாம் தம் கூடாரத்திற்கு **விரைந்து** சென்று, சாராவை நோக்கி, ‘**விரைவாக** மூன்று மரக்கால் நல்ல மாவைப் பிசைந்து, அப்பங்கள் சுடு’ என்றார்” (தொநூ 18:6). பின்னர், ஆபிரகாம் மாட்டு மந்தைக்கு **ஓடிச்சென்று,** ஒரு நல்ல இளங்கன்றைக் கொணர்ந்து வேலைக் காரனிடம் கொடுக்க, அவன் அதனை **விரைவில்** சமைத்தான். எத்துணை வேகம், எத்துணை விறுவிறுப்பு பாருங்கள்! இந்த விரைவான உபசரிப்புக்குக் கைம்மாறாக ஒரு மகனை வாக்களித்தார் ஆண்டவர் (தொநூ 18:10).

புதிய ஏற்பாட்டிலோ ஆண்டவர் இயேசுவே “விரைவு விரும்பியாக” இருப்பதைப் பார்த்து வியக்கிறோம். சக்கேயுவை இயேசு சந்தித்தபோது, “அவரிடம், சக்கேயு, **விரைவாய்** இறங்கிவாரும்; இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்‘ என்றார். அவர் **விரைவாய்** இறங்கி வந்து மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றார்” (லூக் 19:5-6) என்று வாசிக்கிறோம்.



தம்மைக் காட்டிக்கொடுக்கவிருந்த யூதாசிடமே இயேசு “நீ செய்யவிருப்பதை **விரைவில்** செய்” (யோவா 13:27) என்று சொல்லி நம்மை வியப்பிலாழ்த்துகிறார். அவருடைய போதனையிலும்கூட “உங்கள் எதிரி உங்களை நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லும் போது வழியிலேயே அவருடன் **விரைவாக** உடன்பாடு செய்துகொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் எதிரி நடுவரிடம் உங்களை ஒப்படைப்பார்” (மத் 5:25) என்று அறிவுறுத்தினார். எனவே, இயேசு செய்பவற்றை விரைவில் செய்யவேண்டும் என்ற மனநிலை கொண்டவராக இருந்தார். தம் மகனிடமிருந்த அதே மனநிலை தாய் மரியாவிடமும் இருந்ததில் வியப்பில்லை.

அன்னை மரியாவைப் போலவே நாமும் தேவையிலுள்ளோரை விரைந்து சந்தித்து, தன்னலம் மறுத்து உதவி செய்வோமாக!

**அருள் மரி வேந்தன்**

# இறைவாக்கினர்களின் அரசி

இறைவாக்கினர் என்பவர் பின்வருவதை முன்அறிவிப்பர் அல்ல. மாறாக, முன்நின்று அறிவிப்பவரே இறைவாக்கினர். இந்த மாதம் அன்னையின் திருபெயரான இறைவாக்கினர்களின் அரசி என்ற அன்னையின் பெயரை தியானிக்க நாம் அழைக்கப்படுகின்றோம்.

இறைவாக்கினர் என்னும் சொல் இறைவனின் வாக்கினை உடையவர், இறைவனின் வாக்கு அருளப்பெற்றவர், இறைவனின் வாக்கை எடுத்துரைக்க இறைவனாலே நியமிக்கப்பட்டவர் என்பதை குறிக்கின்றது. இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் மறக்க முடியாத, மறுக்க முடியாத தடம் பதித்தவர்கள் இந்த இறைவாக்கினர்கள் இஸ்ரயேல் இனம் மட்டுமல்ல அவர்களைச் சுற்றி வாழ்ந்த பல்வேறு இன மக்களும் இறைவாக்கினர்களைப் பெற்றிருந்தாலும் இஸ்ரயேலின் இறைவாக்கினர்களுக்கும் பிற இறைவாக்கினர்களுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன.

முதலாவது, இஸ்ரயேலின் இறை வாக்கினர்கள் அரசர்கள் ஆட்சியாளர்களுக்கு தூபம் காட்டியவர்களல்ல. மாறாக, அரசர்கள் தவறிழைக்கும்போதும் தங்கள் ஆட்சிக்குரிய செயல்பாடுகளிலிருந்து தடம் மாறும்போதும் அது தவறு என்பதைக் கூறத் துணிந்தவர்கள். ஆக, அரசனுக்கான இறைதிருவுளம் என்ன என்பதை எடுத்துக்கூற தவறாவர்கள்.

இரண்டாவது, இஸ்ரயேல் இறை வாக்கினர்கள் தாங்கள் வாழ்ந்த காலச்சூழலில் இறைவனின் தரத்தை, அவரது உடனிருப்பை கண்டுணர்ந்ததுடன், இறை பராமரிப்பை அனுபவிக்க முடியாமல் தவித்த அவர்களின் மக்களும் இறைபராமரிப்பை உணர்த்தியவர்கள். எடுத்துக்காட்டாக, பாபிலோனிய அடிமைத்தனத்தில் உழன்ற இஸ்ரயேல் மக்கள் கடவுள் தங்களை கைவிட்டு விட்டார் என எண்ணினர். இவ்வேளையில்தான், எசேக்கியேல் இறைவாக்கினர் பாபிலோனியாவில் காட்சி ஒன்றை காண்கிறார் என்பதை எடுத்துக் கூறுகின்றது. இக்காட்சியில் கடவுளின் அரியணை பாபிலோனியாவை நோக்கி வருவதை காண்கிறார். ஆக, கடவுள் தன் மக்களை கைவிடவில்லை அவர்களின் துன்பத்தில் பங்கேற்க அவர்கள் இருக்கும் இடத்திற்கே தேடிவந்துள்ளார் என்பதை எசேக்கியேல் அவர்களுக்கு எடுத்துரைக்கின்றார்.

மூன்றாவது, இறைவாக்கினர்கள் மக்களை இறைவனிடம் கொண்டு சென்றவர்கள் மட்டுமல்ல. மாறாக ஏழைகள், கைவிடப்பட்டோர், அண்டை அயலர் என அனைவரையும் அன்பு செய்வதே இறைவனுக்கு செய்யும் தொண்டு என்பதைக் கூறி ஏழை எளியவர்களிடமும் அழைத்து வந்தவர்கள். இதைத்தான் எசாயா இறைவாக்கினர் மிக அழகாக கூறுவார் (எசா 1:17) "நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள், நீதியை நாடித் தேடுங்கள், ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள், திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள், கைபெண்ணுக்காக வழக்காடுங்கள்" என்று.

இறைவாக்கினர்களின் இத்தகைய பண்பு நலன்களைக் கொண்டு தன் மகன் இயேசுவின் இறைவாக்குப் பணியை தன் வாழ்வில் நிறைவேற்றியவர்தான் நம் தாய்மரி. இவரின் இறைவாக்குப் பணிக்கு சான்றாகத் திகழ்வது மரியாவின் புரட்சிப்பாடல். இப்பாடலில், இறைவன் எவ்வாறு தன்னுடைய வாழ்விலும் தன் நாட்டு மக்களின் வாழ்விலும் இருந்து வாழ்ந்து வருகிறார் என்பதை எடுத்துக் கூறுகின்றார்.



எனவே தான், லூக் 1:49 இல் "ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அருப்பெரும்செயல்கள் செய்துள்ளார்" எனத் தொடங்கி தன் மக்களுக்கு இறைவன் செய்த செயல்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக எடுத்துரைக்கின்றார்.

மேலும், அரசர்கள் தவறையும் சுட்டிக்காட்ட மறவாத இறைவாக்கினர்களைப் போல் உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரையும், தங்கள் வலிமையின் மேல் நம்பிக்கை வைத்து, இறைவனில் தஞ்சம் புக தயங்குபவர்களையும் இறைவன் வீழ்த்தி விடுவார் என்பதை எவ்வித அச்சமும் கலக்கமுமின்றி லூக் 1: 50-52 வரையுள்ள பகுதியில் எடுத்துரைக்கின்றார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்தி, பசித்தோரை நலன்களால் நிரப்புகிறார் என்பதைக் கூறி இறைவனே சார்பாக துணையாக நின்று வழிநடத்தும் ஏழைகள் மேல் நாமும் அக்கறை உடையவர்களாக விளங்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறார். இவ்வாறு இறைவாக்கினர்களின் அரசியாய் திகழ்கின்றார் நம் தாய்மரி என்பது மறுக்கமுடியா உணர்வு.

இவ்வன்னையை பாதுகாவலியாகக் கொண்டுள்ள நாம் அவளைப்போல் இறைவனின் வாக்கைத் தாங்கி நிற்கும் இறைவாக்கினராய், அநீதி எனில் அரசனையும் அதிகாரம் படைத்தோரையும் கேள்வி கேட்கத் துணியவும், நம் வாழ்விலும், நம்மைச் சுற்றி நடக்கும் அனைத்து நிகழ்வுகளிலும் இறைப் பராமரிப்பை உணர்ந்து அவரது வழிநடத்துதலைக் கண்டுணரவும், இறைவன் மேல் காட்டும் அன்பை நம்முடன் வாழும் ஏழை எளியோருக்கும் வழங்கும் கருவிகளாகத் திகழ அன்னையை நோக்கி மன்றாடுவோம்.



**ஸ்டார்லின் ச.ல.**

40 மரியன்னைப் புனிதர்கள்

# புனித வின்சென்ட் தே பவுல்

(1581 - 1660)

## அன்புப் பணியாற்றிய அன்னையின் மகன்!



புனித வின்சென்ட் தே பவுல் என்னும் பெயரை நாம் அனைவரும் அறிவோம். இன்று உலகின் 153 நாடுகளில் அறப்பணிகள் செய்யும் வின்சென்ட் தே பவுல் சபை இவரது பெயரால்தான் தொடங்கப்பட்டுள்ளது. ஆனால், தொடங்கியவர் அருளாளர் ஃப்ரடெரிக் ஓசானாம். ஆனால், புனித வின்சென்ட் தே பவுலின் அன்புப் பணிகளால் ஈர்க்கப்பட்டே அவரது பெயரில் இந்த சபை தோற்றுவிக்கப்பட்டது.

புனித வின்சென்ட் தே பவுலின் வாழ்விலும், பணியிலும் அன்னை மரியாவின் தாக்கம் பெரிதும் இருந்தது என்பது வின்செந்தியர்களுக்கு மட்டுமல்ல, மரியின் மைந்தர்கள் அனைவருக்குமே ஊக்கம் தரும் செய்தி.

புனித வின்சென்ட் தே பவுல் பிரான்ஸ் நாட்டின் எளிய குடும்பத்தில் ஜான், பெர்ட்ரன்ட் என்னும் விவசாயப் பெற்றோரின் ஐந்து குழந்தைகளில் மூன்றாவதாகப் பிறந்தவர். 1600ஆம் ஆண்டு தமது 19ஆவது வயதிலேயே குருவாகத் திருநிலைப்படுத்தப் பட்டுவிட்டார். ஆனால், குருத்துவத் திருநிலைப்பாட்டிற்குக் குறைந்தது 24 வயதாவது ஆகியிருக்க வேண்டும் என்னும் திரிதெந்தின் பொதுச் சங்கத்தின் விதியின்படி, குருத்துவப் பணியாற்றாமல் துலூஸ் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டதாரியானார்.

பின்னர், பாரிஸ் நகரின் குடிசைகளுக்கிடையே ஏழைகளுக்காகப் பணியாற்றினார். குருக்களுக்குத் தியானங்கள் நடத்தி ஊக்குவிப்பதில் சிறந்து விளங்கினார். கடல் பயணத்தின்போது கொள்ளையர்களால் சிறைபிடிக்கப்பட்டு, சில ஆண்டுகள் அடிமையாக இருந்தார். பின்னர், தப்பி வந்து தமது மறைப் பணியைத் தொடர்ந்தார்.

1625ஆம் ஆண்டு “நற்செய்தி அறிவிப்பு சபையை” (Congregation of Mission) தோற்றுவித்தார். பாரிஸ் நகரைச் சுற்றிய ஏழைப் பகுதிகளில் அன்புப் பணியாற்றுவதற்காக பெண்களுக்கான பக்த சபையை உருவாக்க விரும்பினார். செல்வந்தர்களின் உதவியால் மருத்துவமனைகளை ஏற்படுத்தினார். புனித லூயிஸ் டி மாரில்லாக்குடன் இணைந்து, “சேவையின் மகள்கள்” (Daughters of Charity) சபையைத் தோற்றுவித்தார். இவர்கள் ஏழைகளைச் சந்தித்து உணவு கொடுத்தனர், நோயாளர்களைப் பராமரித்தனர், கல்வி கற்க உதவினர். இச்சபை இன்று “வின்சென்ட் தே பவுலின் சேவையின் மகள்கள்” என்று அழைக்கப்படுகிறது.

புனித வின்செண்ட் தே பவுல் மரியன்னைமீது சிறந்த பக்தி கொண்டிருந்தார். குழந்தைப் பருவத்தில் வீட்டின் அருகே இருந்த பல்கோஸ் மரியன்னைத் திருத்தலத்துக்குத் திருப்பயணமாகச் செல்லும் பழக்கம் கொண்டிருந்தார். குருவாகத்; திருநிலைப்படுத்தப்பட்டதும் தமது முதல் திருப்பலியை ரெமுவில் மரியன்னைத் திருத்தலத்தில்தான் நிறைவேற்றினார். மரியன்னையின் உதவியால்தான் அடிமைத்தனத்திலிருந்து தப்பி விடுதலை பெற்றதாக வின்செண்ட் நம்பினார். எனவே, மரியன்னைக்கு என்றும் நன்றிடன் வாழ்ந்தார்.

“நம் ஆண்டவரின் புனித அன்னை” என்றே அவர் மரியாவை அழைத்தார். கடிதங்களை “ஆண்டவர் மற்றும் அவரது புனித அன்னையின் அன்பில்” என்று முடிக்கும் பழக்கம் இவருக்கு இருந்தது. அவர் தொடங்கிய “சேவையின் மகள்கள்” துறவற சபையின் பாதுகாவலியாக அன்னை மரியாவே விளங்கினார். தமது சபையினர் எப்போதும் செபமாலை வைத்திருக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார். ஒவ்வொரு மாதா திருவிழாவின்போதும், முந்தின நாள் நோன்பு கடைப்பிடிக்க வேண்டுமென்று அவர்களை ஊக்குவித்தார். மரியன்னை விழாக்களை அவரே சிறப்பாகக் கொண்டாடினார்.

தமது சபை உறுப்பினர்களிடம் மரியன்னை பக்தி இருந்தால் மட்டுமே போதாது என்று நம்பினார் புனித வின்செண்ட். மாறாக, அந்த அன்னையிடம் விளங்கிய கீழ்ப்படிதல், இறைநம்பிக்கை, எளிமை, அடிமைபோலத் தாழ்த்திக் கொள்ளுதல் போன்ற நற்பண்புகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்று கற்பித்தார். அன்னை மரியாவே நம் அனைவருக்கும் சிறந்த மாதிரி என்று போதித்தார்.

புனித வின்செண்ட் மரியாவின் அமல உற்பவத்தின்மீது பக்தி கொண்டிருந்தார். எனவே, வின்செந்தியர்கள் டிசம்பர் 8 அன்று அமலோற்பவத் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அன்புப் பணிகளுக்கு பணத் தட்டுப்பாடோ, வேறு எந்தத் தடையோ வந்ததே இல்லை என்பதே அவரது அனுபவம். “செபிக்கிறவர்களால் எதுவும் செய்ய முடியும்” என்று அடிக்கடி சொல்வார்.

**காத்தரின் லபோரே** என்னும் பிரஞ்சு அருள்சகோதரி அன்னை மரியாவைப் பலமுறை காட்சிகளில் கண்டார். அவரது மரியன்னைக் காட்சிகளின் தூண்டுதல் புனித வின்செண்ட் தே பவுல்தான் என்பது ஒரு வியப்பின் தகவல். காத்தரின் லபோரே சார்ந்திருந்த “சேவையின் மகள்கள்” சபையின் பாதுகாவலர் புனித வின்செண்ட் தே பவுல்தான். அவரது திருவிழாவைக் கொண்டாடும் விதமாக முந்தின நாள் தியானத்தில் காத்தரினின் தலைமை அன்னை அவர்களுக்கு வின்செண்ட் தே பவுல் அணிந்திருந்த திருத்துகிலின் ஒரு சிறிய துண்டை வழங்கி, அந்தப் புனிதரைப் போலவே இவர்களும் புனித வாழ்வு வாழவேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

இந்த உரையால் ஊக்குவிக்கப்பட்ட இளந்துறவி காத்தரின் புனித வின்செண்ட் தே பவுலை நோக்கி மன்றாடினார். தான் எப்படியாவது மரியன்னையைக் காட்சியில் காணவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். என்னே வியப்பு! அன்றிரவே இரவு 11.30 மணிக்கு சிற்றாலயத்தில் அன்னை மரியா காத்தரின் லபோரேவுக்குக் காட்சி தந்தார். புனித வின்செண்ட் தே பவுலிடம் மன்றாடிய அவரே இன்று ஒரு புனிதையாக அறிவிக்கப்பட்டுவிட்டார்.

உண்மையான மரியியல் ஆன்மீகத்தை உணர்ந்துகொண்டவர் புனித வின்செண்ட் தே பவுல். எனவேதான், தமது அன்பை சேவைகளின் மூலம் வெளிப்படுத்தி இயேசுவுக்கும், அவரது தாய்க்கும் உகந்தவராய்த் திகழ்ந்தார். நாமும் அவரைப் பின்பற்றலாமே!



அருள்பணி. குமார்ராஜா



# விவிலியப் போட்டி 74

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## எபிரேயர் திருமடல்

**கோடிட்ட இடத்தை நிரப்புக. விடைகளில் அதிகாரம், வசனம் எழுதவும்.**

1. ________ நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர்.
2. ________ சிறந்த திட்டம் ஒன்றை வகுத்திருந்தார்.
3. தாங்களே ________ அறைந்து, வெளிப்படையாக இழிவுபடுத்துகிறவர்கள் ஆவர்.
4. ________ சிந்துதல் இன்றி பாவமன்னிப்பு இல்லை.
5. அவர் இரத்தம் ________ நமக்கெனப் புதியதொரு வழியைத் திறந்து வைத்துள்ளார்.
6. தமக்காகக் காத்திருப்பவர்களுக்கு ________ அருளும் பொருட்டே தோன்றுவார்.
7. ________ கிடைத்தபின் பாவத்திற்குக் கழுவாயாகச் செலுத்தும் பலிக்கு இடமேயில்லை.
8. நம் சகோதரர் திமொத்தேயு ________ பெற்று விட்டார்.
9. அவரிடம் கூறியவரே அந்த மேன்மையை அவருக்கு ________ .

**விடைகள் அனைத்தையும் கோர்த்தால், உங்களுக்கான தவக்காலச் செய்தி கிடைக்கும். (உதவி: எபே 1:7)**

**விடைகளை வாட்ஸ்அப்பிலும் அனுப்பலாம் : 90920 55199 (அருள்பணி. ஸ்டார்லின்)**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.03.2021**

**பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் அன்பியப் பெயரையும் எழுதுங்கள்.**

# விவிலியப் போட்டி 73

**பிப்ரவரி 2021** — விடைக்குறிப்புகள்

**திருத்தூதர் பணிகள் நூல்**

| | |
|---|---|
| 1. மனம் | திப 9:22 |
| 2. மாறுங்கள் | திப 2:38 |
| 3. ஏனெனில் | திப 12:23 |
| 4. இறையாட்சி | திப 28:31 |
| 5. நெருங்கி | திப 7:17 |
| 6. வருகிறது | திப 24:3 |
